9th August 1966]

திரு. சோ. ஆறுமுகம் : ஆண்களைவிட பெண்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கை எடுப்பது நலம் என்ற கருத்து இருக்கிறது. ஆனால், இந்த அறிக்கையில் பெண்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? குடும்பக் கட்டுப்பாடு மருத்துவ மனைக்குச் சென்றால் ஒரு நாளைக்கு 20 பேர்களுக்குத்தான் சிகிச்சை என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, இதற்கென்று தனியாக ஒரு ஆஸ்பத்திரியை வைக்க சர்க்கார் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பெண்கள், ஆண்கள் இரண்டு பேர்களுமே செய்துகொள்ள வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. அதிகம், குறைவு என்பதெல்லாம் அவரவர்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்பைப் பொறுத்தது. இன்றைக்கு இருக்கக்கூடிய மருத்துவ மனைகளில் ஸ்பெஷலாக டாக்டர்கள் போட்டு, இதற்கென்று தனியாக டைம் வைத்துக் கொண்டு அறுவை சிகிச்சை செய்கிறார்கள். பெண்கள் குறைவாக இருக்கிறார்கள் என்றால், அதற்கு ஆண்கள்தான் காரணம் என்று நினைக்கிறேன்.

திரு. செ. மாதவன் : குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் 'லூப்' முறையை அமல்படுத்த மத்திய சர்க்கார் ஏதாவது திட்டம் வகுத்து நிதி ஒதுக்கியிருக்கிறதா ? நம் மாநில அரசு எந்த வகையில் அதை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : 'லூப்' முறையை மத்திய சர்க்கார் வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்தில் அவசரப்பட்டுச் செய்ய வேண்டாம் என்று மூன்று ஜில்லாக்களில் மட்டும், ஸ்பெஷலிஸ்டுகள் இருக்கும் தாலூகா, ஜில்லா ஆஸ்பத்திரிகளில் செயல்பட்டு வருகிறது. மற்ற இடங்களுக்கு மெதுவாக எக்ஸ்டென்ட் செய்ய வேண்டும் என்கிற உத்தேசம் இருக்கிறது.

பாலர் விகாரம்

*285 கேள்வி.—திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) சென்னை கோட்டையில் வேலை செய்யும் திருமணமான பெண்களின் நலனுக்காக பாலர் விகாரம் ( ) ஒன்றை கோட்டையில் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா ?

(இ) ஆமெனில் எப்போது நிறுவப்படும் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) No.

(b) Does not arise.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : தலைவர் அவர்களே, ஆண்களும் பெண்களும் சேர்ந்து பணிசெய்தால் குடும்பப் பொருளாதாரம் நல்ல முறையில் அமையும் என்று அதிகமாகப் பெண்கள் பணிமனைகளில் பணிபுரிந்து வருவதால், இன்றைக்கு செக்ரடேரியட்டில் கூட அதிகமாகப் பெண்கள் பணி புரிந்து வருவதை

[9th August 1966

முன்னிட்டு, அவர்கள் அடிக்கடி தங்கள் குழந்தைகளைப் பார்த்து வந்தால் நல்ல முறையில் பணிபுரிவார்கள் என்ற உத்தேசத்திலாவது, இங்கெல்லாம் பாலர் விடுதிகள் ஏற்படுத்த நம் சுகாதார அமைச்சர் முன்வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த உத்தியோகம் செய்யும் பெண்களுடைய சௌகரியத்திற்காக 'க்ரிசே' ஆரம்பிக்க வேண்டியதுதான். ஆனால், இங்கே கோட்டையில் ஆரம்பிப்பது உசிதம் இல்லை என்று நினைக்கிறேன்.

Beggar Homes

* 286 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the estimated number of able bodied, diseased, and invalid beggars respectively found in Madras City; and

(*b*) the number of Care Homes together with their capacities to take in these beggars?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) முறையே 1,256, 274, 288.

(இ) சென்னையில் இரண்டு பிச்சைக்கார விடுதிகள் உள்ளன. சென்னை கார்ப்பரேஷன் பிச்சைக்கார விடுதியில் 300 நபருக்கும் தயாசதன் விடுதியில் 600 நபருக்கும் இடமுள்ளன.

திரு. வை. சங்கரன் : சென்னையை எடுத்துக் கொண்டால் 1,800 பேர்களுக்கு மேல் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் உடல் நலம் குன்றியவர்களும், உடல் நலம் உள்ளவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்காக தனித்தனி ஹோம்கள் வைத்திருக்கிறோம். இவர்களை தரப்படி சட்டத்தின் கீழ் பிடித்து வைக்க சர்க்கார் என்னென்ன ஏற்பாடு செய்கிறார்கள் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்கெல்லாம் என்னென்ன செய்யவேண்டும் என்று பார்த்து 'பெக்கர் ந்யூசன்சை'ப் போக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : சார், சென்னை நகரத்தில் நிறைய பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தடுக்க என்ன திட்டம் இருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மெட்ராஸ் ப்ரிவென்ஷன் ஆப் பெக்கிங் ஆக்ட், 1945, என்கிற சட்டத்தை அமண்ட் செய்து, 1—5—1966 முதல் அமலுக்கு வந்திருக்கிறது. அந்தச் சட்டப் பிரகாரம் அவர்களை, ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஹோம்களில் பிடித்து வைக்க வேண்டும். பிடித்துப் போடுகிறோம். உடல் நலம் உள்ளவர்களுக்கு ஏதாவது உத்தியோகம் வாங்கிக் கொடுக்க வேண்டும். பிடித்துக் கொண்டு வைத்தாலும் அவர்கள் ஓடிப் போய் விடுகிறார்கள். போலீஸ் உதவியோடு என்னென்ன செய்ய வேண்டுமோ அந்த வகையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.